டி.பி.எம்.மைதீன்கான் - சு.சுப்பிரமணியன் சிறப்புரை!

நெல்லையில் கழக சட்டத்துறை மண்டலம்-1 ஆலோசனைக் கூட்டம்!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். ரவிச்சந்திரன் சிறப்புரை!

நெல்லை.நவ.7- தி.மு.க.சட்டத்துறை தென் மண்டலம் 1 திருநெல்வேலி,தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, தேனி மாவட்ட மற்றும் மாநகர வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சார்பில் நெல்லை வண்ணார் பேட்டை அஃப்னா பார்க்கில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன் தலைமையில் கழக சட்டத்துறை துணைச் செயலாளர் எஸ்.ராஜா முகமது, தலைமை கழக வழக்கறிஞர் எஸ்.எஸ்.மனோஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. நெல்லை கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி வரவேற்புரை யாற்றினார். நிகழ்ச்சியை மாநகர வழக்கறிஞரணி அமைப்பாளர் எம். சுரேஷ்குமார் தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்டம் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்.

நிகழ்வில் வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தூத்துக்குடி இளம்பரிதி,செல்வக்குமார்,தென்காசி பிச்சையா,தங்கராஜ் பாண்டியன், கன்னியாகுமரி குமார் சேரலாதன்,

ஜோசப் ராஜ்,தேனி தனுஷ்கோடி,

ஆகியோர் உள்பட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் நெல்லை மத்திய மாவட்ட வழக்கறிஞர் அணி எம். காமினி தேவன் நன்றியுரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்ற தீர்மானங்கள் வருமாறு.

கலைஞர் அவர்களின் மூத்த பிள்ளையாம் முரசொலி பத்திரிகையை கடந்த 50 ஆண்டு காலமாக பல்வேறு சோதனைகளுக்கு இடையே வழிநடத்தி சென்றவரும்,சிறந்த எழுத்தாளரும், திராவிட இயக்க சிந்தனையாளருமான பெரும் மதிப்பிற்குரிய ஐயா முரசொலி செல்வம் அவர்களின் மறைவால் பெரும் துயரில் இருக்கும் கழகத் தலைவர் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கும், முரசொலி நாளிதழின் பணியாளர் களுக்கும்,கழகத் தோழர்களுக்கும், திராவிட இயக்க பற்றாளர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலிலும் 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாடு முழுவதிலும் தேனீ போல் சுற்றி ஓய்வறியாமல் பிரச்சாரம் செய்து திமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெற காரணமாக இருந்தது மட்டுமல்லாமல் தமிழகத்தை அடுத்த அரை நூற்றாண்டுக்கு வழி நடத்திச் செல்ல இளைஞர் அணி பட்டாளத்தை மிகச் சிறப்பாக உருவாக்கி இயக்கத்திற்கு வலு சேர்த்து வரும் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு துணை முதலமைச்சர் பொறுப்பு வழங்கிய கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும் துணை முதல் வராக பொறுப்பேற்றுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டம் பாராட்டையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

திமு கழகத்தின் சட்டத்துறை மாநில நிர்வாகிகளாக தேர்வு செய்து இயக்கப் பணியாற்ற வாய்ப்பு கொடுத்த கழகத் தலைவர் அவர்களுக்கும் இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் அவர்களுக்கும்,கழகச் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி., தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வது.

2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் அமைத்த தி.மு.க. ஒருங்கிணைப்பு குழு,தி.மு.க. சட்டத்துறை செயல்பாடுகள் குறித்து மேற்கொண்ட ஆய்வின் முடிவின்படியும், முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணையின்படியும் எதிர்வரும் 2026 சட்டமன்றத் தேர்தலை ஒட்டி தி.மு.க. வழக்கறிஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் ஆகியோர்கள் தேர்தலுக்கான ஆயத்த பணிகளை தொடங்கி சிறப்பாக செயல்படுத்திடவும், துரிதப்படுத்தவும்,தி.மு.க.சட்டத்துறை மாநில நிர்வாகிகள் அடங்கிய தென் மண்டலம்1 பொறுப்பாளர்கள் கே.எஸ். இரவிச்சந்திரன்(சட்டத்துறை இணைச் செயலாளர்) எஸ்.ராஜா முகமது (சட்டத்துறை துணைச் செயலாளர்) மற்றும் எஸ்.எஸ்.மனோஜ் தலைமை கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் அடங்கிய பொறுப்புக் குழுவின் தலைமையில் அந்தந்த மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் தத்தமது மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் வழக்கறிஞர் அணி பணிகளை துரிதப்படுத்தி,அதன் விவரத்தை தி.மு.க. சட்டத்துறை செயலாளரிடம் ஒப்படைப்பது என்றும்.

துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை சிறப்பாக கொண்டாட முடிவு செய்யப்பட்டு வருகின்ற நவம்பர் 27 அன்று இளைஞர் எழுச்சி நாளான துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை யொட்டி தி.மு.க.சட்டத்துறை சார்பில் அனைத்து நீதிமன்ற வாயில்களின் முன்பாக கேக் வெட்டி,இனிப்பு மற்றும் நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடுவது மற்றும் கருத்தரங்கங்கள் இளம் வழக்கறிஞர் களுக்கு சட்ட புத்தகங்கள் வழங்கியும், பிறந்த நாளை சிறப்பாக நடத்துவது எனவும்.

தி.மு.க.ஆட்சி பொறுப்பேற்றுது முதல் ஒன்றிய அரசு மாற்றான் தாய் மனப்பான்மையுடன் நடந்து வருவதோடு மட்டுமல்லாமல்,தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவி அவர்களின் மூலம் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு பல்வேறு முட்டுக்கட்டைகளையும்,தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மூலம் ஒன்றிய அரசு செய்து வருகிறது. குறிப்பாக தமிழ் மொழியையும் திராவிட கலாச்சாரத்தையும் அழித்து,ஒழிக்க ஆளுநர் ஆர்.என்.ரவி ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்பட்டு வருகிறார் இதன் ஒரு பகுதியாக சென்னை டி.டி தமிழ் சேனலில் சார்பில் நடைபெற்ற இந்தி வார நிறைவு விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் முன்னிலையில் பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்தில் வேண்டுமென்றே திட்டமிட்டு "தெற்கணமும் அதில் சிறந்த திராவிட நல் திருநாடும்" என்ற வரிகளை தவிர்த்து பாடச் செய்து அதைக் கேட்டு ரசித்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களின் குரூர மனப்பான்மையையும், தமிழ்தாய் வாழ்த்தை அவமரியாதை செய்ததையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் பொதிகை என்று அழகான தமிழ் பெயில் இருந்த தமிழ் ஒளிபரப்பை தூர்தர்ஷன் தமிழ் என்று பெயர் மாற்றம் செய்த ஒன்றிய அரசையும் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

வருகிற 2026 தமிழக சட்டமன்றத் தேர்தல் களத்தில் மொத்தம் 200 தொகுதிகளுக்கும் மேல் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற இலக்கினை வகுத்துள்ள நமது முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிநடந்து,நமது சட்டத்துறை செயலாளர் தலைமையின் கீழ் கண் துஞ்சது,அயராது உழைத்து வெற்றியினை கழகத் தலைவர் அவர்களுக்கு சமர்பிப்போம் என்றும்.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினர் பதவிக்கு ஏ.பி.வி.பி.மாநில தலைவர் சவிதா ராஜேஷை பரிந்துரை செய்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.மேலும் ஆர். எஸ்.எஸ் சித்தாந்தம் கொண்ட ஒருவரை நியமித்து கல்வி நிலையங்களை காவி நிறமாக்கிய தமிழ் நாட்டின் ஆளுநர் ஆர். என். ரவி மரியாதைக்குரிய பதவியான ஆளுநர் பதவிக்கு தகுதியற்றவர்.என இக்கூட்டம் கண்டனம் தெரிவிக்கிறது.

நடந்து முடிந்த 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் தி.மு.க.கூட்டணி வெற்றி பெற்று வருவதற்கு கழகத் தலைவர் அவர்களின் உழைப்பும், கழகத்தின் எதிர்காலமான துணை முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு சூறாவளி சுற்றுப் பயணமே இந்த மாபெரும் வெற்றிக்கு காரணமாக அமைந்தது.தமிழ்நாட்டின் 40 நாடாளுமன்ற தொகுதிகளிலும் தி.மு.க. சட்டத்துறை செயலாளர் தலைமையின் கீழ் தி.மு.க. சட்டத்துறை மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள் திறம்பட செயல்பட்டு கழகத்திற்கு உறுதுணையாக இருந்தது.இக்கூட்டம் மகிழ்ச்சியுடன் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

இதில் வரும் 2026 ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தலில் கழக சட்டத்துறை செயலாளர் தலைமையில் தென் மண்டலம் 1ன் பொறுப்பாளர்களின் அறிவுறுத்தலின் படி தென்காசி வடக்கு, தெற்கு,தூத்துக்குடி வடக்கு,தெற்கு, நெல்லை கிழக்கு,மத்திய, கன்னியாகுமரி கிழக்கு, மேற்கு,தேனி வடக்கு, தெற்கு ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த கழக வழக்கறிஞர் அணி நிர்வாகிகளும், கழக வழக்கறிஞர்களும் சிறப்பாக பணியாற்றுவது என்றும்.

தி.மு.க.வழக்கறிஞர் அணி உறுப்பினர்கள் தேர்தல் பணியை தீவிர படுத்துவது,தி.மு.க.வில் முதன்மையாக விளங்கும் தி.மு.க. சட்டத்துறையின் உறுப்பினர் சேர்க்கை பணியை தீவிரப்படுத்தி அதிகமான வழக்கறிஞர்களை உறுப்பினராக சேர்த்திடுவது என்றும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமை!

நெல்லை மாநகர தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்!

தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் - ச. முத்துச் செல்வி சிறப்புரை!

நெல்லை.நவ.7- நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் திருநெல்வேலி, பாளையங்கோட்டை தொகுதி பார்வையாளர்கள் அறிமுக கூட்டம் தச்சநல்லூர் ஜி.வி மகாலில்நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் தலைமையில் மாவட்ட அவைத் தலைவர் முருகன், மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள், பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன்(தச்சை) நமச்சிவாயம் (நெல்லை) அண்டன் செல்லத்துரை (பாளை) மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர்அலிஃப்மீரான்,இனியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாளை சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும்,மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார்,நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நிகழ்வில் வட்ட செயலாளர்கள் சடாமுனி,சிந்து முருகன்,மனோகரன் பத்மராஜ்,அகமது ரகுமதுல்லா, மனோகர்,மேகை செல்லம், பிரேம் கணேசன், லெனின், சிவ அய்யப்பன், தென்கரை முத்து,ஆறுமுகம், கதிரேசன்,பேபி கோபால்,கிங் பாலா, காஜா முகைதீன், அகமது பாதுஷா, ராபர்ட் செல்லையா, அந்தோணி, மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், வட்ட பிரதிநிதிகள்,கழக பேச்சாளர்கள் உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் நன்றி உரையாற்றினார்.இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேருவை திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு திட்டங்களை திறம்பட நிறைவேற்றிடவும், அரசுப் பணிகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட நம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்ததற்கு நன்றி.

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலிபடி, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளரும்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

நிகழ்வில் வட்ட செயலாளர்கள் சடாமுனி,சிந்து முருகன்,மனோகரன் பத்மராஜ்,அகமது ரகுமதுல்லா, மனோகர்,மேகை செல்லம், பிரேம் கணேசன், லெனின், சிவ அய்யப்பன், தென்கரை முத்து,ஆறுமுகம், கதிரேசன்,பேபி கோபால்,கிங் பாலா, காஜா முகைதீன், அகமது பாதுஷா, ராபர்ட் செல்லையா, அந்தோணி, மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மாநகர சார்பு அணிகளின் நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், வட்ட பிரதிநிதிகள்,கழக பேச்சாளர்கள் உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாவட்ட வர்த்தக அணி தலைவர் அவதார் ஷாஜகான் நன்றி உரையாற்றினார்.இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் வருமாறு.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி,துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர் கே.என்.நேருவை திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு திட்டங்களை திறம்பட நிறைவேற்றிடவும், அரசுப் பணிகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட நம் மாவட்டத்தின் வளர்ச்சிக்காக, மாவட்ட பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்ததற்கு நன்றி.

முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர்,கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலிபடி, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி பார்வையாளராக மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதி பார்வையாளராக மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் ச.முத்துச்செல்வி ஆகியோரை நியமித்தமைக்கு நன்றி.

கழக இளைஞர் அணி செயலாளர், கழகத்தின் எதிர்காலம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர கழகத்தின் சார்பு அணிகள் சார்பாகவும்,மாநகர கழக நிர்வாகிகள் சார்பாகவும், அன்னதானம் வழங்குதல்,மரம் நடுதல்,ஏழை,எளிய மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், கல்வி ஊக்கத் தொகை வழங்குதல், கழகத்தின் மூன்றாண்டு சாதனைகளை விளக்கும் தெருமுனை கூட்டங்கள் நடத்துதல், இரத்ததான முகாம் நடத்துதல், ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவுதல் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட நிகழ்வுகளை தொடர்ச்சியாக நடத்தி,நம் இளந்தலைவர் அவர்களின் பிறந்த நாளை கொண்டாடுதல்.

முதலமைச்சர்,நம் பாச மிகு கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணையின்படி, துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி,நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அறிவுறுத்தலின்படி, நெல்லை மாநகரப் பகுதிகளில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் கனமழையினால் பாதிக்கப்படும் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யதல்.

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவினை முன்னிட்டும், கழகத்தின் பவளவிழாவை முன்னிட்டும், கழக இளைஞர் அணி சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி தமிழ்நாடு முழுவதும் 17 ஆயிரம் இளம் பேச்சாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, "என் உயிரினும் மேலான"என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் கழகத்திற்காக 182 சொற்போர் வீரர்களை தேர்ந்தெடுத்த கழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் சின்னவர் அவர்களுக்கு நன்றி.

முதலமைச்சர்,நம் பாச மிகு கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி,துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு வழிகாட்டுதலின்படி, 2026ம் ஆண்டு நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத் தேர்தலில் 200 க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெறும் பொருட்டு, பாளையங்கோட்டை மற்றும் திருநெல்வேலி சட்டமன்றத் தொகுதிகளில் வரலாறு காணாத வகையில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற அனைவரும் இரவு,பகல்,பாராது உழைத்தல்.

முதலமைச்சர்,நம் பாச மிகு கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் உத்தரவின்படி,துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சர்,கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு வழிகாட்டுதலின்படி,வாக்காளர் அடையாள அட்டை பெயர் சேர்த்தல், நீக்கு தல், திருத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுதல்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் - குறிச்சி 'சிட்கோ' தொழிற்பேட்டையில் கட்டப்பட்டு வரும்

தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதியின் கட்டுமானப் பணிகள்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு ஆய்வு செய்தார்!

கோவை, நவ.7- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.11.2024) கோயம்புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 23 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதியின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டை யில் தொழிலாளர்களுக்கான தங்கும் விடுதிக்கு முதலமைச்சரால் 2022-ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்டது.

தொழிலாளர்களின் நலனைப் பேணும் வகையிலும், அவர்களுக்கு பணி செய்திடும் இடங்களின் அருகிலேயே தங்கும் வசதியை ஏற்படுத்திடும் வகையிலும், கோயம் புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி கட்டுமானப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.8.2022 அன்று குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் திருப்பூரில் நடைபெற்ற 'தோள் கொடுப்போம் தொழில்களுக்கு' மண்டல மாநாட்டில் அடிக்கல் நாட்டப்பட்டது.

குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் கட்டுமானப் பணிகள்!

கோயம்புத்தூர், குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் 1.49 ஏக்கர் நிலப்பரப்பில், 98,812 சதுர அடி கட்டட பரப்பளவில் கட்டப்பட்டு வரும் தொழிலாளர் விடுதிக் கட்டடம் மூன்று தளங்களுடனும் கட்டப்பட்டுவருகிறது.

மேலும், இவ்விடுதிக் கட்டடங்கள், "A" மற்றும் "B" ஆகிய இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இதில் "A" பிரிவில் 66 அறைகளும், "B" பிரிவில் 45 அறைகளும், என மொத்தம் 111 அறைகளைக் கொண்டதாகவும் கட்டப்பட்டு வருகிறது. இவ்விடுதியில் 528 தொழிலாளர்கள் தங்கும் வசதியுடன், 2 மின்தூக்கிகள், விளையாட்டுத் திடல், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள், மழை நீர் சேகரிப்பு வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

இவ்விடுதிக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், பணிகளை விரைந்து முடித்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சிட்கோ தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் ஆ.கார்த்திக், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் திருமதி அர்ச்சனா பட்நாயக், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வரத. கோபாலகிருஷ்ணன்

நவம்பர் 7 (2001)

திருவாரூர் மாவட்டக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், ஒன்றியப் பெருந்தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

நன்னிலம் பகுதியில் கழகம் வளர்க்க பாடுபட்டவர். வாழ்நாள் முழுவதும் இயக்கப் பணிகளுக்காக தன்னையே அர்ப்பணித்தவர்.

நெருக்கடி நிலையின்போது ஓராண்டு சிறைவாசம். மேலும், கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

க. வேல்சாமி

நவம்பர் 7 (2007)

இளம் வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் பகுதியில் முதன்முதலாக பல்வேறு கிளைக் கழகங்களை அமைத்தவர்.

மோகனூர் கிளைக் கழகம் அமைத்து, அதன் செயலாளர் பின்னர் மாவட்ட பிரதிநிதி என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1996ல் நாமக்கல் தொகுதியில் கழக சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.